# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337, நிகரி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

************

முறையீட்டு மனு எண்.0324/2015

ஆணை எண். 22/2015

நாள்: 17/12/2015

திரு. K. தங்கமுத்து,
வடக்கு தெரு, அம்மச்சியாபுரம் அஞ்சல்,
ஆண்டிபட்டி தாலுகா,
தேனி மாவட்டம். - முறையீட்டு மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர் (ம) ஊராட்சி செயலர்
ஆண்டிப்பட்டி தாலுகா
தேனி மாவட்டம். - எதிர் மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகா, அம்மச்சியாபுரம் அஞ்சல் வடக்கு தெருவை சேர்ந்த திரு. K. தங்கமுத்து என்பவர் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஒன்றியம் அம்மச்சியாபுரம் ஊராட்சி செயலர் (ம) வட்டார வளர்ச்சி அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இம்முறைமன்றத்தில் மனு சமர்ப்பித்துள்ளார். இந்த மனுவானது 11.12.15 தேதியிட்டு மனு எண்.324 ஆக பதிவு செய்யப்பட்டு உள்ளது.

## ஆணை

அம்மச்சியாபுரம் ஊராட்சியில் ரொக்க புத்தக பதிவு, இருப்பு பதிவேடு படிவம்–18 மற்றும் பராமரிப்பு பதிவேடு படிவம்–17 பதிவுகள் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என திரு. K. தங்கமுத்து என்பவர் இம்முறைமன்றத்தில் மனு சமர்ப்பித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2014 சட்டப்பிரிவு 2க்கு உட்பட்ட உட்பிரிவுகள் 7 மற்றும் 11–ல் உள்ளாட்சி அமைப்புகள் (ம) பொதுப்பணியாளர் என்பதற்கு அளிக்கப்பட்ட விளக்கத்தில் ஊராட்சி மன்ற அமைப்பு (ம) ஊராட்சி பிரதிநிதிகள் இடம்பெறவில்லை. எனவே மனுதாரர் குறிப்பிட்டுள்ள முறைகேடு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு புகார் மனுவினை தேனி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அமைப்பு முடிவுசெய்து அதன் அடிப்படையில் முறையீட்டு மனு முடித்து வைக்கப்படுகின்றது.

ஒப்பம்/–
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//**

17/12/15
**கண்காணிப்பாளர்**

பெறுநர்

மாவட்ட ஆட்சியர்,
தேனி மாவட்டம்,
தேனி (இணைப்புடன்)

நகல்

திரு. K. தங்கமுத்து;
[illegible]க்கு தெரு, அம்மச்சியாபுரம் அஞ்சல்,
ஆண்டிபட்டி தாலுகா,
தேனி மாவட்டம்.